Regd. No. M. 4593. "KUDI ARASU" 12பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 } சனிக்கிழமை, 28-4-1945 சித்திரை-மீ 16உ { மலர் 29

# பார்வதி-பரமசிவன் சம்பாஷணை

(சித்திரபுத்திரன்)

பார்வதி:-எனது பிராணநாதனாகிய ஓ சிவபெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற கருடன் என்கின்ற பட்சியைப்பார்த்து பலர் காலையிலும், மாலையிலும் கன்னங்கன்னமாய் போட்டுக்கொள்ளுகிறார்களே அது எதற்காக நாதா?

பரமசிவன்:- கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் நமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால் விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக்கண்டால் கன்னத்திலடித்துக்கொள்ளுகிறார்கள்.

பார்வதி:-ஓஹோ, அப்படியா சங்கதி! சரி, அப்படியானால் நமது அடிமை வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும்போது நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக்கண்டால் ஏன் யாரும் கன்னத்திலடித்துக்கொள்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள், ஓடை அடிக்கிறார்கள், செக்கில் கட்டி ஓட்டுகிறார்கள், அடித்துக்கூட தின்றுவிடுகிறார்களே அது ஏன்?

பரமசிவன்:- நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை. நன்றாகச் சாம்பலை பூசிக்கொள்ளத்தான் தெரியும். நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

பார்வதி:- அதுதான் போகட்டும், நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னங்கன்னமாய் அடித்துக்கொள்ளாமல் தடியெடுத்து அடித்துக்கொன்று விடுகிறார்கள்? அய்யோ பாவம்!

பரமசிவன்:- கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. ஏனென்றால் கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போது அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள்; அதற்கும் பால், நெய், தயிர் ஊற்றி கொழுக்கட்டையை வைப்பார்கள். நம் பக்தர்கள் யோக்கியதையே இப்படித்தானே! இந்த வெட்கக்கேட்டை யாருடன் சொல்லுவது!

பார்வதி:- அதுதான் போகட்டும், தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும் சோ! சோ! என்று விரட்டுகிறார்களே அது என்ன காரணம் நாதா?

பரமசிவன்:-கண்மணி அதுவும் பக்தர்களின் அறியாத்தனம்தான். ஆனாலும் அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? அதனால் அதன் மீது சிலர் அருசப்படுகின்றார்கள் போல் இருக்கிறது.

பார்வதி:-என்ன நாதா, வைணவக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால் மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுத்தமான வஸ்துக்களையெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்தப் பக்தர்கள் மன்னிக்கும்போது மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக் கூடாது?

அதுதான் போகட்டும், நமது குமாரன் வாகனமாகிய மயிலைக் கண்டால் ஏன் முருக பக்தர்கள் கன்னங்கன்னமாய்ப் போட்டுக் கொள்ளு[illegible]லை? அன்றியும் ஆட்டைக் க[illegible] அடித்துத் தின்றுவிடுகிறார்களே! அவன் கொடியாகிய சேவலைக்கண்டால் அறுத்துத் தின்றுவிடுகிறார்களே! இது என்ன அநியாயம்?

பரமசிவன்:- அது அந்த பக்தர்களின் பக்திக்குறைவு. அதற்கு நாம் என்ன செய்யலாம்.

பார்வதி:- நாதா! சரி, சரி இதையெல்லாம் பார்க்கும் போதுதான் எனக்கு மிகவும் வெட்கக்கேடாயிருக்கின்றது. நமக்குக் கீழ்ப்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கௌரவமும், அவர் பக்தர்களுக்கு மாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும், நமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக் குறைவும், நமது பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக் குறையும் இருப்பதும் எனக்கு வெளியில் தலைகாட்ட முடியவில்லையே! தவிர விஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலக்ஷ்மி கூட இதனாலேயே அடிக்கடி என்னைப் பார்த்து பரிகாசம் பண்ணுகின்றாள். இதுதவிர நம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல் நம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல் விஷ்ணு வாகனத்திற்கு விஷ்ணு பக்தர்களைப் போலவே கன்னங்கன்னமாய் போட்டுக் கொண்டு மரியாதை செய்கிறார்களே! இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்துப் பாருங்கள்.

பரமசிவன்:-என்ன செய்யலாம் சகி? தலையில் பிரம்மன் இப்படி

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# திராவிட மாணவர் கூட்டங்கள்

13-4-45-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திராவிட மாணவர் கழக ஆண்டு விழா திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் கடலூர் இருசப்பசெட்டி தெருவில் நடைபெற்றது.

சி. இளவழகன் கழக ஆண்டு அறிக்கையைப் படித்தார். வில்லாளன், இராமசாமி, தண்டபாணி, பழனி, வீரமணி முதலிய மாணவர்களும் பகுத்தறிவுப் புலவர் நா.மு. மாணிக்கம், சென்னை சிவரத்தினம் ஆகியோரும் மாணவரியக்கத்தைப் பற்றி பேசினார்கள். ஆ. திராவிடமணி நன்றி கூறினார்.

* *

13-4-45-ந் தேதி மாலை 7 மணிக்கு மஞ்சக்குப்பம் மைதானத்தில் தோழர் நா. பீட்டர் பி. ஏ. அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் சென்னை ந. சிவரத்தினம், புலவர் நா. மு. மாணிக்கம், காஞ்சி கலியாணசுந்திரம், திருச்சி தி. பொ. வேதாசலம் ஆகியோர் இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள். ஆ. திராவிடமணி நன்றி கூறின பின் கூட்டம் இனிது கலைந்தது.

* *

14-4-45 மாலை 6 மணிக்கு கடலூர் வண்டிப் பட்டினம் சொக்கு தெருவில் தில்லைப் பகுத்தறிவுப் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்து பகுத்தறிவு கழகம் ஒன்றைத் திறந்துவைத்தார்கள். 7 மணிக்கு பகுத்தறிவு சிறுவன் கி. வீரமணி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் புலவர் மாணிக்கம், வில்லாளன், இளவழகன் ஆ. திராவிடமணி இசக்கரியா ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

* *

15-4-45 மாலை 7 மணிக்கு குறிஞ்சிப்பாடியில் நகராட்சி மன்றத் தலைவர் பி. பி. முத்தையா அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் திராவிடமணி, சென்னை ந. சிவரத்னம், காஞ்சி கலியாணசுந்தரம், இரெ. இளம்வழுதி, வீரமணி ஆகியோர் பேசினார்கள். ஆர். சரவணன் நன்றி கூறினார்.

1945-ம் ஆண்டிற்கு குப்பையா முதலியாரைத் தலைவராகக் கொண்ட திராவிடர் கழக செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

* *

16-4-45 திங்கள் இரவு 9 மணிக்கு குறிஞ்சிப்பாடிக்கு அடுத்த வடக்கு மேலூரில் ஆ. வைத்தியலிங்கப்படையாட்சி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் அவர்கள் திராவிடக் கழகத்தை திறந்துவைத்தார்கள். ஆ. திராவிடமணி, சி. இளவழகன் இருவரும் இயக்கக்கொள்கைகளை விளக்கி பேசினார்கள். பின்னர் நாராயணசாமி படையாட்சி அவர்களைத் தலைவராகக் கொண்ட திராவிடர் கழகச்செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

* *

17-4-45 மாலை 7-30 மணிக்கு கடலூர் மஞ்சுமியார் பேட்டையில் திராவிடக் கழகத்தின் சார்பில் தோழர் பொ. தியாகராசன் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் காஞ்சி. கலியாணசுந்திரம், ஆ. திராவிடமணி இருவரும் இயக்கக்கொள்கைகளை விளக்கிப்பேசினார்கள்.

* *

நாகூர் வண்டிக்காரத் தெருவில் ரா. கோவிந்தராசு அவர்கள் தலைமையில் திராவிட மாணவர் மன்றம் திறக்கப்பட்டது. தோழர்கள் ஆர். குருசாமி, எஸ். ரெங்கராஜு, ஜி. ஜகனாதன், எஸ். தேவராஜு முதலியவர்கள் திராவிட மாணவர் கடமை என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

ஜோடர்பாளையம் திராவிடர் கழகத்தின்சார்பில் 13-4-45தேதியும் 15-4-45ந் தேதியும் "இணையில் அல்லது இணையற்ற வீரன்", "வீர வாலி" என்னும் நாடகங்கள் நாடக ஆசிரியர் தோழர் டி. பி. வேலாயுதசாமி உதவியுடன் நடிக்கப்பட்டன. அந் நாடகத்தின் முக்கிய பாத்திரர்களுக்கு வெள்ளி பதக்கங்கள் சன்மானமாக வழங்கப்பெற்றது.

* *

ஈரோடு திராவிடர் கழகத்தின் ஆதரவில் தோழர் எம். கணேசன் தலைமையில் 18-4-45ந் தேதி திராவிடர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கட்டிபாளையம் கணபதி, நக்கீரர், பி. கெ. அய்யா முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

17-4-45-ந் தேதி இரவு 9 மணிக்கு தோழர் ஜம்புலிங்கம் தலைமையில் கூடிய ஆரணி திராவிடர் இளைஞர் கழக சார்பில் கழக வளர்ச்சி குறித்து தோழர் டி. கே. குப்புசாமி பேசினார். பின் தோழர் வி. திங்கள் அழகன் உயிர்க் கவி பாரதிதாசன் அவர்களது 54-வது பிறந்த (17-4-1891) நாளைப் பற்றியும், தோழர் திருமாறன்னன் அவர்கள் டாக்டர் அம்பேத்காரின் 53-வது பிறந்த நாள் 14-4-45-ல் வந்தது பற்றியும் வலியுறுத்திப் பேசினர். பிறகு தோழர் ரத்ன சபாபதி அவர்கள் சர் செல்வம் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினார். இறுதியாகக் 'கழக வளர்ச்சி' குறித்துப் பல முக்கிய தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன. தோழர் சிக்கண்ணன் டி. ஏ. நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

## தென்மண்டல திராவிட மாணவர் மாநாடு திருவாரூர்

அம் மாநாடு 1-5-45ந் தேதி திருவாரூரில் நடைபெறும்.

தலைவர்:- E. V. K. சம்பத்.

திறப்பாளர்:- க. மதியழகன்.

கொடியேற்றுபவர்:- இரா. சொக்கப்பா.

தோழர்கள் நா. மு. மாணிக்கம் ஜனார்த்தனம் பி.ஏ., இரெ. இளம்வழுதி, வீரமணி (10வயது), தவமணிராசன் முதலியவர்கள் முறையே, 'என்ன வேண்டும்', 'மாசொலிகேட்டு', 'வான்முனையில்', 'போர்க்களம் நோக்கி' 'இளமையின் எழுச்சி' என்பதுபற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

மற்றும் தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அவமானப்படும்படியாக விதித்துவிட்டான். விதி யாரைவிட்டது சொல் பார்ப்போம். என் கண்மணி! நீ இதற்காக அழவேண்டாம்; உன்னைப்பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

பார்வதி:-சரி, சரி. இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாக்கும். இனி நீங்கள்வேறு அழவேண்டும்? போனால் போகட்டும். இம்மாதிரி நம் தலையில் எழுதிய அந்தப் பிரம்மாவைப் பேசிக்கொள்ளலாம். வாருங்கள் நம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்.

## 'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.

# இந்திய சமஸ்தானங்களைப்பற்றிய 50 உண்மைகள்

1. இந்திய உபகண்டத்தில் 3ல் ஒரு பகுதியை இந்திய சமஸ்தானங்கள் கொண்டிருக்கின்றது.

2. இந்திய மன்னர்கள் 10-கோடி மக்களை ஆட்சி புரிகின்றனர். அதாவது பிரிட்டனுடைய ஜனத்தொகையில் 2-மடங்கிற்கும் அதிகமாகவுள்ள ஜனங்கள் சமஸ்தான ஆட்சிக்கு உட்பட்டுள்ளனர்.

3. சமஸ்தானப் பிரஜைகளுக்கு நீதி வழங்குவதில் பிரிட்டிஷ் நீதி மன்றங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

4. மகாத்மா காந்தியும் ஒரு இந்திய சமஸ்தானத்தில்தான் பிறந்தார். அதாவது போர்பந்தர் (கத்தியவார்) என்ற இடத்தில்.

5. சமஸ்தானங்களின் மொத்தத் தொகையில் 76 சதவிகித சமஸ்தான மன்னர்கள், மன்னர்களடங்கிய சபையில் அங்கத்தினர்களாகும். இந்த ஸ்தாபனம் பிரதிநிதித்துவம் கொண்ட ஸ்தாபனங்களைக்கொண்டு நிற்பது.

6. தவிர்க்க முடியாத சில இடங்களைத் தவிர சமஸ்தானத்தில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் வேற்றுமையில்லை. அநேக சமஸ்தானங்களில் கோவில்கள், மாதா கோவில்கள், மசூதிகள் முதலியன ஒன்றுக்கொன்று பக்கத்திலே இருக்கின்றன. 20-ஆம் நூற்றாண்டில் அழகிய மசூதியை இந்தியாவில் கட்டியவர் ஒரு முஸ்லிம் அல்லாதவர். அதாவது மே. த. கபூர்தலா மகாராஜா.

7. ஹைதராபாத் சமஸ்தானத்தில் உள்ள பல்கலைக் கழகத்தில்தான் எல்லாக் கலைகளும் தாய்மொழியில் கற்பிக்கப்படுகின்றன.

8. உலகத்தில் போபால் சமஸ்தானம் ஒன்று தான் ஏறக்குறைய 100 ஆண்டுகளாய் பேரறிவு படைத்த உயர்தரப் பெண்மணிகளால் ஆட்சி நடத்தப்பட்டு வந்திருப்பதாகும்.

9. இந்தியாவிலுள்ள ஹைதராபாத் சமஸ்தானத்தில் தான் முதன்முதலாக இந்தியாவில் நீதியும், நிர்வாகமும் பிரிக்கப்பட்டன. இந்த சீர்திருத்தத்தை இதுவரை இந்திய மாகாணம் எதிலும் அமுலுக்கு கொண்டுவரவில்லை.

10. ஆசியாவின் சரித்திரத்தில் முதல் தடவையாக திருவாங்கூர், அநேக ஆதிய சமஸ்தானங்களில் மட்டுந்தான் தாழ்த்தப்பட்டோர் [illegible] செய்யப்படுவதற்கு [illegible]

11. காஷ்மீர் சமஸ்தானத்தில் முதல் தடவையாக 18 வயதுக்குட்பட்ட பையனுக்கும், 14 வயதுக்குட்பட்ட பெண்ணுக்கும் கலியாணம் நடக்கக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டது.

12. திருவாங்கூர் சமஸ்தானத்தில் இந்தியாவில் கல்வி அறிவு பெற்றோர் தொகை அதிகமாகும். கொச்சி சமஸ்தானத்தில், இந்தியாவில் முதல்தடவையாகக் கட்டாயக் கல்வி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

13. இந்திய சமஸ்தானங்கள் பிரிட்டிஷார் ஏற்படுத்தியதல்ல; ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நிலைப்பதற்கு வெகு காலைக்கு முன்பே சமஸ்தானங்கள் இருக்கின்றன.

14. இந்தியப் பல்கலைக் கழகத்தில் முதன்முதலாக பட்டம் பெற்ற பெண் மைசூர் சமஸ்தானத்திலிருந்து வந்தவராகும், இந்தியாவிலே கொச்சி சமஸ்தானத்தில்தான் ஒரு பெண்மணி, பிரதம வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பது.

15. இந்தியாவில் கூட்டுக் கல்வியைப் பற்றி அறியாத காலத்தில், பரோடா சமஸ்தானத்தில் கூட்டுக்கல்வி (ஆணும், பெண்ணும் சேர்ந்து படிப்பது) முதலில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

16. இந்திய சமஸ்தானங்களில்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனிப்பட்ட முறையில் பள்ளிக்கூடங்கள் முதலில் திறக்கப்பட்டன. அது மட்டுமல்ல மற்ற சாதாரணப் பள்ளிக்கூடங்களிலும் ஹரிஜனங்களை அனுமதிக்கும் உரிமையும் வழங்கப்பட்டது.

17. பொதுமக்கள் கல்வியைப் பரப்புவதில் அவசியமான சாதனம் என்று கருதி முதலாவதாகக் கிராம நூல் நிலைய முறையைப் பரோடா சமஸ்தானத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

18. பெரும்பாலும் எல்லா சமஸ்தானங்களிலும் ஆரம்பக் கல்வி இலவசமாய்க் கொடுக்கப்படுகிறது. அநேக பள்ளிக்கூடங்களில் இடைத்தரக் கல்வியும் கூட இலவசமாய்த் தரப்படுகிறது. சில சமஸ்தானங்களில் உயர்தரக் கல்வி உட்பட எல்லாவிதக் கல்வியும் இலவசமாய் வழங்கப்படுகிறது.

19. பரோடாவில் உள்ள பழங்கலை ஞான இன்ஸ்டிடியூட் இந்தியாவிலே மிகவும் பழமையானது [illegible] மாகும். இங்கே மதிப்புள்ள உயர் இலக்கியங்கள் வைக்கப்பட்டுள்ளன. பழங்கால நூல்களின் பதிப்பிக்கப்படாத புதுமையான புத்தகங்களும் இங்குள்ளன.

20. ராம்பூரிலுள்ள சமஸ்தான புத்தக நிலயம் இந்தியாவிலேயே குறிப்பிடத்தக்கது. இங்கு பல்வேறு மொழிகளில் உள்ள 10,000 மூலப் பிரதிகளும் அற்புதமான சித்திரக்கலைப் படங்களும் உள்ளன. இவை தலைசிறந்த இந்திய, பாரசீக சிற்ப நிபுணர்கள் வரைந்தவை.

21. கவிஞர்கள், சிற்ப நிபுணர்கள், இசைவாணர்கள், முதலியோருக்கு ஆதரவளிப்பதில் இந்திய மன்னர்கள் முன்னணியில் இருக்கின்றனர். இப்படி செய்வதைக் கொண்டு பரம்பரையாக இந்தியாவின் தேசிய கலை ஞானத்தை மன்னர்கள் பாதுகாப்பு செய்கிறார்கள்.

22. அஜந்தா, எல்லோரா என்ற உலகப்பிரசித்திபெற்ற மலைக் குகைகள், அந்த சிற்பங்களுக்கும் கோயில்களுக்கும் பெயர்போனவை. பழங்கால இந்திய கல்வெட்டுக் கலைஞனுடையவும், சிற்பத்திறமையினுடையவும் மேன்மையான நிலையை எடுத்துக்காட்டுவதற்கு அவை ஒரு எடுத்துக்காட்டு. இவை ஹைதராபாத் சமஸ்தானத்தில் இருக்கின்றன.

23. சாஞ்சியிலுள்ள ஸ்டூபாஸ் கட்டிடங்கள். இந்தியாவின் புத்தமத சிற்பக் கலைக்கு சிறந்ததும் உயர்ந்ததுமான முறையில் தலை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இவை போபால் சமஸ்தானத்தில் இருக்கின்றன. இந்த சமஸ்தானத்தின் மன்னர் ஒரு முஸ்லிமாகும். இவர் இந்த ஸ்டூபாஸ் கட்டிடங்களைப் பாதுகாப்பதில் அதிகப்பணத்தைச் செலவுசெய்துள்ளார்.

24. உலகிலே மிக அழகிய நகரமாய் ஏரிகளையும், பளிங்குக் கோபுரங்களையும் அழகுமயமாகிய கட்டிடங்களையும் கொண்டு பார்ப்பதற்கு ரம்மியமான முறையில் விளங்குவது உதயப்பூர் நகரமாகும்.

25 ஜயப்பூரிலுள்ள ஆம்பர் அரண்மனையில், பிரசித்திபெற்ற திசை யறிவிப்பு யந்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரண்மனை மானசிங்மகாராஜாவால் 1718-ம் ஆண்டு கட்டப்பட்டது. பழைய காலச் சிற்பங்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டு உதாரணமாய் இலங்குகிறது.

26 தார் சமஸ்தானத்தில் (மத்திய இந்தியா) மண்டு என்ற பிரசித்திபெற்ற மலைக்கோட்டை இருக்கிறது. இந்த இடம் பழங்காலத்திலும், மத்திய காலங்களிலும் இருந்த அநேக ராஜ்யங்களின் தலைநகராக இருந்துவந்திருக்கிறது. இங்கே அழகிய கோபுரங்களும், அரண்

அலங்காரமான கோபுரங்களும், (சமாதிகளும்) இருக்கின்றன.

27. உலகத்திலே மிகப் பெரிய நீர் வீழ்ச்சி மைசூர் சமஸ்தானத்திலுள்ள ஜெரோசப்பா என்ற இடத்தில் இருக்கிறது. நீர்வீழ்ச்சி 830 அடி உயரத்திலிருந்து பாய்ந்து செல்லுகின்றது.

28. நிஜாம் சாகர் அணைக்கட்டு ஹைதராபாத் சமஸ்தானத்தில் இருக்கிறது. இது உலகத்திலேயே மிகப் பெரிய அணைக்கட்டுகளில் ஒன்றாகும். இந்தியாவில் உள்ள பெரிய அணைக்கட்டுகளில் இது இரண்டாவதாகும்.

29. மைசூரில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் அணைக்கட்டு 124 அடி உயரமுடையது. இது உலகத்தில் 3-வது பெரிய அணைக்கட்டு. மற்ற இரண்டு சூடானிலுள்ள சென்னாரிலும், எகிப்திலுள்ள அசுவான் அணைக்கட்டுகளாகும்.

30. மைசூர் சமஸ்தானத்தில் உள்ள பத்ராவதியில் இரும்புத் தொழிற்சாலை இருக்கிறது. கிழக்குப் பிரதேசத்திலேயே இது ஒன்றுதான் இரும்பு உற்பத்திச் சாமான்களுக்கு உரியது. இதில் இரும்பை உருக்கும் பெரிய இயந்திரம் இருக்கின்றது! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே இங்கேதான் இது இருக்கிறது.

31. பிக்கானீர் சமஸ்தானத்தில் (ராஜபுத்தனா) உள்ள கங்கால்வாய் உலகத்திலேயே கான்கிரீட்டுகளினால் கால்வாய் குழாய்களைக் கொண்டிருப்பது. இதற்கான செலவு முழுவதையும் சமஸ்தானமே ஏற்றுக்கொண்டது. அதாவது ரெவினியூ வருமானம் அல்லது சமஸ்தானக் கடன் பத்திர நிதிகளைக் கொண்டு இது கட்டப்பட்டது.

32. ஹைடரோ எலெக்டிரிக் (மின்சார வளர்ச்சி) சாதன அபிவிருத்தியில் தலைமை வகித்து நிற்பதும் ஒரு இந்திய சமஸ்தானமே. அது மைசூராகும்.

33. ரயில் ரோடு இணைப்புக்குரிய போக்குவரத்து இந்தியாவிலே முதல் தடவையாக ஹைதராபாத் சமஸ்தானத்தில்தான் வெற்றிகரமாய் அமுல் நடத்தப்பட்டது.

34. மோட்டார் போக்குவரத்து சௌகரியங்களில் இந்தியாவுக்கே குவாலியர் சமஸ்தானம்தான் வழிகாட்டியது.

35. வெப்பநட்ப நிலைகளைச் சமப்படுத்தும் ரயில்வண்டிகளும், மின்சார விசிறிகளும் கொண்ட உயர்தரமான சௌகரிய வண்டிகள் 3-வது வகுப்பு பிரயாணிகளின் சௌகரியத்துக்கு இந்தியாவில் முதல் தடவையாக கிடைக்கும்படி செய்த பெருமை ஹைதராபாத்தைச் சேர்ந்தது.

36. சாட்டார்பூர் சமஸ்தானத்தில் (மத்திய இந்தியா) உள்ள கஜுராகோ கோவிலில் [illegible]ரமான முறை கல்செதுக்குகளும் அழகான சிற்பக்கல் வெட்டு வேலைப்பாடுகளும் இருக்கின்றன. பெரிய அளவுக்கு உயர் சின்னங்களை இந்தியாவில் கொண்டிருப்பதும், வேறு எதிலும் ஈடு செய்யமுடியாத அவ்வளவு வேலைப்பாடு அழகும் இக்கோவிலில்தான் இருக்கின்றன.

37. ஸ்ரீ நகர் பட்டு தொழிற்சாலை காஷ்மீர் சமஸ்தான நிர்வாகத்திற்குள் இருக்கிறது. இது உலகிலேயே மிகப் பெரிய தொழிற்சாலையாகும்.

38. ரசாயன எரு தொழிற்சாலை இந்தியாவிலேயே திருவாங்கூரில் தான் அமைக்கப்பட்டிருக்கிறது. உலகத்தில் இது 2 வது தொழிற்சாலையாகும்.

39. மைசூர் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையில் இரவும் பகலுமாய் சுத்திகரணம் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. உலகத்திலே சந்தன எண்ணெய் உற்பத்திச் சாலையில் இதுவே மிகப் பெரியது.

40. இந்தியாவிலேயே குவாலியர் சமஸ்தானத்தில் உள்ள மண் பாண்டத் தொழிற்சாலை மிகப் பெரியது.

41. மைசூர் சமஸ்தானத்திலுள்ள கோலார் தங்கவயல் உலகத்திலே மிக ஆழமான தங்கச் சுரங்கங்களில் ஒன்றாகும். இந்தியாவின் விலை மதிப்புக்குரிய லோகங்கள் பெரும்பாலும் இங்குதான் உற்பத்தியாகின்றது. 20-லட்சம் அவுன்ஸுக்கு மேற்பட்ட தங்கம் இங்கு உற்பத்தியாகியிருக்கிறது. இதன் விலை மதிப்பு 10-கோடியே 20-லட்சம் பவுனாகும். சுரங்கம் தொடங்கப்பட்டதிலிருந்து 1943-ம் ஆண்டு முடியும்வரை இக்கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

42. காலஞ் சென்ற ரஞ்சி அரசர் (நவாநகர் மன்னர்) தன் அவர் காலத்தில் சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர். உலகத்திலே மிகச் சிறந்த பேட்ஸ்மெனும் ஆவர். கத்தியவாரிலே இதுமிகப் பெரிய சமஸ்தானமாகும்.

43. இந்தூரில் உள்ள யஷ்வந்சாகர் அணைக்கட்டு விஞ்ஞான முறையில் கட்டப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே இதுதான் பெரிய அணைக்கட்டாகும். இது ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது.

44. அக்பர் சக்ரவர்த்தியின் ராஜாங்க மண்டபத்தின் 9 மணிகளில் ஒருவரும், இந்தியா உற்பத்தி செய்த மிகச் சிறந்த பாடகருமான டான்சேன் இந்தியாவிலுள்ள குவாலியர் சமஸ்தானத்தில்தான் புதைக்கப்பட்டிருக்கிறார்.

45. காட்டுகளுள் ஓட்டிருக்கும் டிராம்வே கொச்சியில்தான் இருக்கிறது. எஞ்சினியரின் தொழில் முறையிலே இது ஒரு புதுமை. இந்தியாவில் இப்படி உள்ள டிராம் பாதை இது ஒன்றே தான்.

46. இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிபுணர்களையும், தளவாடங்களையும் கொண்டு இயங்குவதான மருந்து ஆராய்ச்சிச்சாலைகள் இந்தியாவில் காஷ்மீர் சமஸ்தானத்தில்தான் இருக்கின்றன.

47. [illegible] வைத்திய உதவி, பொதுஜன சுகாதார ஸ்தாபனங்களில் அநேக சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களைவிட முன்னணியில் நிற்கின்றன. உதாரணமாக நவீன முறையில் உள்ள வைத்தியக்கார ஆஸ்பத்திரி இந்தியாவிலேயே பெங்களூரில் இருக்கும் மைசூர் சமஸ்தான வைத்திய ஆஸ்பத்திரிதான்.

48. க்ஷயரோக நோயை ஆராய்ந்து சிகிச்சை கொடுப்பதற்காக ஒரு விசேஷ ஸ்தாபனத்தை இத்தேசத்தில் அமைத்திருப்பது காஷ்மீர சமஸ்தானம் ஒன்றுதான்.

49. பாட்டியாலாவில் உள்ள விளையாட்டு ஸ்டேடியம் இந்தியாவில் தலைசிறந்தது. பஞ்சாபின் முக்கிய சமஸ்தானம் பாட்டியாலாவாகும்.

50. 1943—44-ம் ஆண்டுகளில் ஹைதராபாத் தங்கத்தினால் வெளியிடப்பட்ட நாணயங்கள் மொத்த மதிப்பு 1 கோடி 70 லட்சத்திற்கு மேலாகும்.

—"விடுதலை"

## திருமணங்கள்

சாக்கோட்டை தோழர் கோ. வீராசாமி நாயக்கர் புதல்வர் தோழர் வி. சண்முகத்திற்கும் ஷியூர் தோழர் எஸ் வீரப்ப நாயக்கர் புதல்வி தோழர் ராஜலெட்சுமிக்கும் தஞ்சாவூர் தோழர் சாமிநாத நாயக்கர் புதல்வர் தோழர் எஸ். சண்முகத்திற்கும் சாலியமங்கலம் தோழர் எஸ். ரெங்கைய நாயக்கர் புதல்வி தோழர் ஜெயம்மாளுக்கும் கும்பகோணத்தில் 2-5-45-ந் தேதி ரிஜிஸ்தர் திருமணமும் சாக்கோட்டையில் அட்வகேட் தோழர் பி. முத்துகோபாலன் பி. ஏ., பி. எல்., தலைமையில் திருமணப் பாராட்டுதலும் நடைபெறும்.

## திருவாரூர் மாணவர் மாநாடு

திருவாரூரில் 1-5-45-ந் தேதி காலையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் தென்மண்டல திராவிட மாணவர் மாநாட்டில் சேலம் முனிசிபல் கல்லூரி தலைவர் தோழர் ஏ. ராமசாமிக் கவுண்டர் எம். ஏ., எல். டி., அவர்கள், புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் படத்தைத் திறந்துவைப்பார்.

## சேலம் சித்தையன்

கோவைஜில்லா தேசியபோர்முனை சொற்பொழிவாளர் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் கோவையில் "வெப்பநோய்" (அம்மை) வாய்ப்பட்டு இப்போது குணமடைந்து வருகிறார்.

## வருகிறார்கள்

சென்ற மாணவர் பிரசாரத்தைப் போன்று இவ்விடுமுறையிலும் பிரசாரம் செய்ய மாணவர்கள் வருகிறார்கள். அவர்கள் 4-5-45-ல் இருந்து மூன்று நாட்களுக்குப் பயிற்சிபெற்று வருகிறார்கள்.

பெரியாரவர்களும், தளபதி அண்ணாதுரை அவர்களும், வழக்கறிஞர் டி. பி. வேதாசலம் அவர்களும், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஏ. பி. சனார்த்தனம் பி. ஏ. ஆகியோரும் பயிற்சி தருவார்கள்.

மாணவர்கள் பயிற்சியை ஒட்டி 6-5-45-ல் கோவை மாவட்டத் திராவிட மாணவர் மகாநாடொன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை வரவேற்புக் கழகத் தலைவராகக் கொண்ட ஒரு வரவேற்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அது குறித்து விளம்பரங்கள் இரண்டொரு நாட்களில் வெளிவரும். அடுத்த கிழமை இதழிலும் வெளியிடப்படும்.

திராவிடத் தோழர்களே!

மாணவத் தோழர்களை ஒவ்வொரு தாலூக்காவிலுள்ள தோழர்களும் வரவழைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம். மாணவர்கள் ஒரு மாதத்திற்கு மேல் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

மாணவர் சுற்றுப்பிரயாணத்தை ஒட்டி சில மாநாடுகள் நடத்த தோழர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். கூட்டங்கள் நடத்த ஒப்புக்கொண்ட தோழர்கள் தங்கள் பொறுப்பில் கூட்டங்கள் நடத்தும் இடங்களின் பெயரை எழுதினால் நாள் குறித்து அடுத்த 'குடி அரசி'ல் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். உடனே எழுதுங்கள்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

## அறிவிப்பு

கடந்த சில மாதங்களாக 30000-க்கு மேல் உறுப்பினர்கள் திராவிடர் (ஜஸ்டிஸ்) கழகத்திற்கு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கு கழகங்கள் நிறுவப்பட்டு நிர்வாகஸ்தர்களும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவ்விபரங்கள் முழுவதும் திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) தலைமை நிலையத்துக்கு வந்து சேரவில்லை. இதுவரை தலைமை நிலையத்திற்கு அனுப்பியிருப்பவர்கள் போக மீதியுள்ள திராவிட கழகத்தார், நிர்வாகஸ்தர்களின் விபரங்களை 'திராவிடர் கழகம் (ஜஸ்டிஸ்) தலைமை நிலையம் ஈரோடு, என்ற முகவரிக்கு உடனே எழுதி அனுப்பக் கோரப்படுகிறார்கள்.

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஏற்காட்டில் ஓய்வு எடுத்து வருகிறார். அவரது உடல் நிலை குணமடைந்து வருகிறது. இனியும் 20 நாளைக்கு அங்கு தான் இருந்துவருவார். ஏற்காட்டிலிருந்து திரும்பிய பிறகு தான் அழைப்புகளுக்கும் சுற்றுப்பிரயாணங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படும்; மாநாட்டுக்குவேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும். அதற்குள் திராவிடர் கழகம் (ஜஸ்டிஸ்) இல்லாத ஊர்களில் கழகங்கள் நிறுவி, திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) தலைமை நிலையத்திற்கும், 'குடி அரசு' நிலையத்திற்கும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## சென்னையில் பாரதிதாசன் தினம்

### பொதுக் கூட்டம்

29-4-45 ஞாயிறு மாலை 6 மணிக்கு செயின்ட் மேரீஸ் ஹாலில் தோழர் எஸ். ராமநாதன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் S. லட்சுமிரதன் பாரதி, சி. என். அண்ணாதுரை, டி. சண்முகம், கே. அன்பழகன், இந்திராணி பாலசுப்பிரமண்யம், சத்தியவாணி முத்து, ஆகியவர்கள் பேசுவார்கள். அனைவரும் வருக!

சுயமரியாதைச் சங்கத்தார்,
சென்னை.

## சாப்ரூ திட்டம்

### 'ஜோசியம்'

ஒருகாலத்தில் மோதிலால் நேரு திட்டம், சாப்ரூ நேரு திட்டத்தை விட வெகு விளம்பரத்தோடு காங்கிரசின் அந்தராத்மா ஆசியுடன் வெளிவந்தது.

'நேரு திட்டத்தை மண்டையிலடியுங்கள்' என்று 'குடி அரசு' எழுதிற்று. மக்கள் அதைக் குப்பைத்தொட்டியில் போட்டார்கள். என்றாலும் அதனால்தான் அவி சுகோதரர்கள் பிரிந்தார்கள்; லீக்கு உச்ச நிலைக்குப் போக வழி ஏற்பட்டது. இப்போது அதுபோலவே தான் சாப்ரூ திட்டமும் பலன் அடையப் போகிறது.

## ஏற்காட்டில் பொதுக் கூட்டம்

சேலம் ஏற்காடு திராவிட கழகத்தின் ஆதரவில் 29-4-45 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு ஏற்காடு அளகாபுரம் மேல் மைதானத்தில் தோழர் வி. டி. ராஜ் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அதுசமயம் வருங்கால திராவிடர் கடமை என்பது பற்றித் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், தோழர்கள் கே. ஜெகதீசன், ஆர். நடேசன், எம். ஆர். சித்தையன், சேலம் கல்லூரி மாணவர் குமார் மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாந்தலே: அதற்குப்பின் 100 மைல்
தெற்கில் சிலர் போர் நடத்துகிறார்கள்
ஆனால்,
அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச்
செல்லுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு
வசதிகள்
அதிகம் தேவைப்படுகின்றன.
ஆகவே
நமது வீரர்களைத் துரிதப்படுத்த
மே. த. கவர்னர்
யுத்த நிதியில்
துருப்புக்கள் வசதி நிதிக்குப்
பணம் கொடுத்து உதவுங்கள்

குடி அரசு

1945-ளு ஏப்ரல்-மீ 28-உ

# புதுக்கட்சி நடப்பது நடக்கட்டும்

ஜஸ்டிஸ் கட்சியானது சேலத்தில்கூடி சர்க்கார் பட்டம், சர்க்கார் நியமனம் முதலியவைகளை கட்சி அங்கத்தினர்கள் விட்டுவிடவேண்டுமென்றும் இனி பெறவுங்கூடாது என்றும் தீர்மானம் செய்தபிறகு இவைகளில் ஈடுபட்டிருந்தவர்களும் இவைகளை எதிர்பார்த்திருந்தவர்களும் இயற்கையாகவே ஜஸ்டிஸ்கட்சிக்கு எதிரிகளாக ஆகவேண்டியவர்களானார்கள்.

இந்தப்படி எதிரிகளாக ஆனவர்கள் தங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் யோக்கியப் பொறுப்பும் நாணயமும் அற்ற மக்களுக்கு ஆதரவளித்து அவர்கள் மூலம் குழப்பங்கள் உண்டாக்கி அதிலிருந்து ஒரு கோணல்வழியை உண்டாக்கிக்கொண்டு முன் வந்து இப்போது பச்சை எதிரிகளாகவே ஆகி ஆள்கள் சேர்த்து எதிர்ப்பு நாடகம் நடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இதற்கு ஆள்கள் சேரலாம்; எப்படிப்பட்ட ஆளுகள் என்பதை அந்த சேரும் ஆள்களின் பெயர்களைக்கொண்டே மக்கள் தெரிந்து கொள்ளலாம். இவர்களால் ஜஸ்டிஸ் கட்சியை அசைத்துவிட முடியாது. இவர்களின் எப்படிப்பட்ட முயற்சியாலும் ஜஸ்டிஸ் கட்சியின் வேலையைத் தடைப்படுத்திவிடவும் முடியாது. ஆனால் இந்தத் துரோகமான காரியத்திற்கு துணிந்து முன்வருகிறவர்களின் வண்டவாளங்கள் தாக்ஷண்யமில்லாமல் வெளியாக்கப்படவேண்டிய அவசியம் திராவிட மக்களுக்கு இன்றியமையாக் கடனாக ஏற்படப்போகின்றதே என்பது தான் பரிதாபத்திற்குரிய காரியமாகும்.

தோழர்கள் சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், சர் குமாரராஜா, சர் பி. டி. ராஜன், சர் ஏ. பி. பாத்ரோ, ராவ்பகதூர் துரைசாமி முதலியார், ராவ்பகதூர் சாமியப்ப முதலியார் போன்றவர்கள் ஒன்று சேர்ந்து பொது வாழ்விலும், தனி நாணயத்திலும் 3ந்தர 4ந்தர ஆள்கள் சிலர்களையும் சேர்த்துக்கொண்டு ஒரு தனிக் கட்சியை உண்டாக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பது பைத்தியக்காரத்தனம் என்பதைத்தவிர வேறு ஒன்றும் நமக்குப் புலப்படவில்லை. சேலம் மாநாடு கூடும்வரை அதில் கலந்து இருந்து மாநாட்டுக்கு ஆசியும் அனுப்பி இருந்து மாநாட்டுத் தீர்மானங்கள் பலவற்றிற்கு ஆதரவும் அளித்துவந்து திடீரென்று புதுக்கட்சி ஆரம்பிக்க இந்த மேலே குறிப்பிட்டுள்ள தோழர்கள் என்ன காரணத்தைச் சொன்னார்கள்?

பெயர்மாற்றம் குற்றம் என்பார்களேயானால் பெயர் மாற்றத் தீர்மானத்தில் சர் குமாரராஜா, ராவ்பகதூர் துரைசாமி முதலியார் முதலியவர்கள் இருந்து தீர்மானத்தை ஏகமனதாய் நிறைவேற்றி சேலம் மாநாட்டுக்கு சிபார்சு செய்வதாகவும் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

திராவிடநாடு பிரிவினை தீர்மானம் பிடிக்கவில்லை என்றால், அதுவும் சொல்லமுடியாதபடி சர் சண்முகம் அதை ஆதரித்துப் பேசி இருப்பதோடு, சென்னை கன்னிமரா ஓட்டல் கொட்டகையில் கூட்டப்பட்ட நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திற்குத் தனி அழைப்பின் மீது வந்து அக்கமிட்டிக்குத் தீர்மானம் தயாரித்துக் கொடுத்ததிலும், ஈரோடு மாநாட்டுக்கு வந்து அன்று சொற்பொழிவாற்றி இருப்பதிலும் ஒப்புக்கொண்டு ஆதரவளித்து மேற்கொண்டு யோசனையும் கூறி இருக்கிறார். சர் பி. டி. ராஜன் அவர்களும், திவான்பகதூர் ராமச்சந்திர ரெட்டியாரும் திராவிடநாடு பிரிவினைக்குத் திட்டம் வகுக்க திருவாரூர் மாநாட்டில் ஏற்படுத்திய சப்கமிட்டிக்கு மெம்பர்களாக இருக்க சம்மதித்து தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ராவ்பகதூர்களான துரைசாமி முதலியார் சாமியப்பமுதலியார் ஆகியவர்களும் இந்த மாநாடுகளின் வரவேற்புக் கமிட்டித் தலைவர்கள் என்கின்ற முறையில் ஒப்புக்கொண்டு கூட்டங்களிலும் கமிட்டிகளிலும் ஆதரித்துப் பேசி இருக்கிறார்கள். சேலம் மாநாடு நடக்கும்வரை, நடந்த சில நாள்கள், மாதங்கள் வரைகூட இந்தப் பெரியார்கள் யாரும் ஆட்சேபித்துப் பேசியவர்களுமல்ல. மற்றபடி சமுதாய சம்மந்தமான தீர்மானங்களின் எந்தப் பாகம் இவர்களுக்கு திருப்தியில்லாதது என்று இதுவரை ஒருவரும் சொன்னவர்களும் இவர்களில் யாரும் இல்லை. சேலம் மாநாடு விதிகளின்படி நடக்கவில்லை என்று சொல்லுவதற்கும், இவர்கள் யாரும் எந்த விதிக்கு விரோதமாக சேலம் மாநாடு நடந்ததென்றோ அல்லது ஜஸ்டிஸ்கட்சியின் 27வருஷ அனுபவங்களின், பழக்கவழக்கங்களில் எதற்கு விரோதமாக சேலம் மாநாடு நடந்தது என்றோ ஒருவராவது ஒரு சிறு காரியத்தையாவது எடுத்துக்காட்டவும் இல்லை.

ஜஸ்டிஸ் கட்சிக்கு அமைப்பு இல்லை, வேலைத்திட்டம் இல்லை, பிரசாரம் இல்லை, கட்சி வேலை செய்வதில்லை என்றாவது அல்லது, தலைவர் காரியதரிசியாவது அவர்களுக்கு வேண்டியவர்களாவது கட்சியின் மூலம் சுயலாபமோ வியாபாரம் கண்ட்ராக்ட் போரல் பெரும்பணமோ, கட்சி சலுகையால் நாமிநேஷன் பதவி முதலியவைகளோ அடைந்துகொண்டார்கள் என்றாவது ஒருவராவது ஒரு சிறு குற்றமோ குறையோ இதுவரை சொன்னதுமில்லை.

தமிழ்நாடு 12 ஜில்லாவிலும் ஜில்லா ஸ்தாபனங்களும், அவற்றிற்குப் பல கிளைகளும் இந்த 6 வருஷ காலமாக இருந்துவந்திருப்பதுடன் அவைகளுக்குப் பெரும் போட்டிகளும் இருந்துவந்திருப்பதை, இருந்துவருகிறதை எவரும் மறக்கவும முடியாது. இதுவரை யாரும் மறுத்துக் கூறவுமில்லை. தனிப்பட்ட முறையில் கட்சிக்குப் பல பத்திரிக்கைகளும் இருந்துவந்திருக்கின்றன. அவை பெரிதும் கட்சிக்கு ஆக கட்சிக் கொள்கைகளை ஆதரித்து வலியுறுத்தித் தொண்டாற்றி வந்திருக்கின்றன. ஜில்லாக்கள் தோறும் அனேகமாக தாலூகாக்கள்தோறும் வருடம் தவறாமல் மாநாடுகளும் நடந்துகொண்டே வந்திருக்கின்றன. ஆகவே ஒரு கட்சி என்கின்ற முறையில் ஜஸ்டிஸ்கட்சி இதுவரை

யில் எந்தக்காரியத்தில் குறைபாடுடையதாக இருந்து வந்திருப்பதாக யாரால் சொல்லப்பட்டது என்றோ யாரால் எதை சொல்ல முடியும் என்றோ பார்த்தால் அதுவும் தோன்றவில்லை.

கட்சிக்கு சர்க்காரோடு நெருங்கிய சம்பந்தமில்லை என்று சொல்லக்கூடும் என்றால் அதுவும் பொருத்தமற்றதேயாகும். ஜஸ்டிஸ் கட்சி நேர்மையானதாகவும் முக்கியமானதாகவும் இருக்கும், அதற்குப் பாமர மக்களிடம் செல்வாக்கில்லாமல் போனதற்குக் காரணமே ஜஸ்டிஸ் கட்சிக்கும் தலைவர்களுக்கும் சர்க்காரிடம் கட்சிக்கு அதிகத் தொடர்பு இருக்கிறது என்பதும் சர்க்காரைச் சரியானபடி கண்டிக்காமல் சர்க்காருக்கு அடிமையாய் இருந்து பட்டம் பதவிகளுக்கு பல்லைக்காட்டி மக்களைக் காட்டிக்கொடுத்து உத்தியோகம், பதவிகள், லாபங்கள் அடைகிறார்கள் என்பதுமேயாகும். இது சரியோ தப்போ என்பது ஒருபுறமிருந்தாலும் இன்றைய அரசியல் ஆதிக்கம் பாமர மக்கள் ஓட்டைப்பொறுத்தே இருப்பதால் பாமர மக்களுக்குள் இருக்கும் அந்த எண்ணம் கெடுபடவும், பாமர மக்கள் ஆதரவைப் பெறவும் நாம் சர்க்கார் தொடர்பை அலட்சியமாகக் கருதுபவர்களாகவே காட்டிக்கொள்ளவும் சில சமயங்களில் அப்படியே நடக்கவும் வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே வேறு என்ன குறையையோ, தவறையோ ஜஸ்டிஸ் கட்சி மீது குறை சொல்ல விஷயம் இருக்கிறது என்பது விளங்கவில்லை.

கடைசியாகச்சொல்லப்போனால், பட்டம் பதவிகளை விடவேண்டும் என்று சேலம் மாநாட்டில் தீர்மானித்தது சிலருக்கு ஒரு பெருங் குறையாகவோ சங்கடமாகவோ இருக்கலாம். இது ஜஸ்டிஸ்கட்சிக்கு சட்டத்தில் இல்லாவிட்டாலும் காரியத்தில் ஒரு முக்கியமான எழுதப்படாத சட்டமாய் இருந்து வந்ததை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இந்த சட்டம் இந்த கட்சிக்கு இன்றைய நிலைமையில் ஒரு பெரும் க்ஷயரோகம் பாஷாணம் போன்றதேடு என்பது நமது அபிப்பிராயம்.

எப்படி எனில்,

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 28-4-45ந் தேதி வரை 31722 அங்கத்தினர்கள்

## ரூ 3130–14–0 சந்தா

எப்ரல் மாதம் 28ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 5516 | 9. சென்னை | 1700 |
| 2. கோவை | 5500 | 10. மதுரை | 1432 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 806 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 192 |
| 5. இராமநாதபுரம் | 2268 | 13 பெங்களூர் | 158 |
| 6. திருநெல்வேலி | 2089 | 14. புதுக்கோட்டை | 65 |
| 7. வட ஆற்காடு | 1828 | | |
| 8. தென் ஆற்காடு | 1802 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 31722. சந்தா ரூ. 3130-14-0

1. நாம் இன்று போட்டி போடும் அல்லது நம்மை எதிர்த்து தோற்கடிக்கும் கட்சியாகிய காங்கிரசுக்குப் பட்டம், பதவி, நாமினேஷன் உள்ளவர்கள் உதவாதவர்களாக சேர்க்கப்படக்கூடாதவர்களாக இருந்துவருகிறது.

2. பட்டம் பதவி உள்ள ஆள்களிடம் பாமர மக்களுக்கு—ஓட்டர்களுக்கு மதிப்பில்லை, நல்ல எண்ணமும் இல்லை.

3. நம் போட்டி ஸ்தாபனமாகிய காங்கிரசுக்கு இருக்கும் யோக்கியதாம்சத்தில் ஜெயிலுக்குப் போவது என்பது முக்கியமானது.

4. நாமும் அவசியம் ஏற்பட்டு ஜெயிலுக்குப் போக வேண்டி நேரிட்டால் பட்டம் பதவி ஆளர்கள் ஜெயிலுக்கு வர சம்மதிக்க மாட்டார்கள் என்பதல்லாமல், சர்க்காருடனோ எதிரிகளுடனோ சேர்ந்துகொண்டு அந்த முயற்சியை அழிக்கவே முயற்சித்து தொல்லை விளைவிக்க வேண்டியவர்களாக ஆகிவிடுவார்கள்.

5. பட்டம்பதவி இல்லாததால் காங்கிரசில் டாக்டர் சுப்பராயலும், டாக்டர் ராஜகோபாலாச்சாரியும் கூட்டத்திற்கு எங்கும் வருகிறார்கள். எங்கு வந்தாலும் மண் புழுதிகளில் கீழே உட்காருகிறார்கள். 15 பேர் உள்ள கூட்டமானாலும் வருகிறார்கள்.

6. பட்டம், பதவி உள்ளவர்களோ கூட்டத்திற்கு வருவதற்கு, ஆள் சேர்ந்துவிட்டதா, முன் வரிசையில் நாற்காலி காலியா? தனி மரியாதைக் குறி இருக்குமா? இந்தக் கூட்டத்திற்குப் போவதால் நம் கௌரவம் குறைந்து போகாமல் இருக்குமா? நம்மைப் பற்றி ஏதாவது கேள்வி கேட்டுவிடுவார்களா? சர்க்கார் ஏதாவது தப்பாய் நினைக்குமா என்பது போன்ற அநேக யோசனைகளால் அவர்கள் (பட்டதாரிகள்) நமக்குப் பயன்படுவதில்லை என்பதோடு பல சங்கடங்களும் ஏற்படுகின்றன.

அன்றியும் 1939 ஜனவரி முதல் 1945 ஜனவரிவரையில் இந்த பட்டதாரிகள் கட்சிக்காக கூட்டாகவோ தனியாகவோ கட்சி நலத்திற்கு கட்சிமேன்மைக்கு தங்கள் சொந்தத்தில்செய்த பெருங்காரியமென்ன?, என்று எதைச் சொல்ல இவர்களால்முடியும் என்று பார்த்தால், 'நான் அவனுக்குப் பணம் கொடுத்தேன் இவனுக்குப் பணம் கொடுத்தேன்' என்பதைத் தவிர 'அந்தக்கூட்டத்திற்குப்போய் தலைமை வகித்தேன், இந்தக்கூட்டத்திற்குப்போய் தலைகாட்டினேன், அதற்குவாழ்த்துக் கடிதம் தந்தி அனுப்பினேன்' என்பதுதவிர, கட்சிக் கொள்கையைப்பற்றியோ கட்சி நலத்தைப்பற்றியோ ஆற்றிய தொண்டு என்று எத்தனை விரலை

மடக்கமுடியும் என்று பார்த்தால் ஒரு கைவிரல்கூட மடக்கமுடியாதென்றே சொல்லலாம்.

மற்றும் இவர்கள் பணங்கொடுத்து உதவியதில் பெரும்பாகம் கட்சியில் கலகம் மூட்டவும் தங்களுக்கு சொந்தபலம் சேர்க்கவும் பயன்படுத் தொல்லை விளைத்திருக்குமென்றால் அதை மறுக்க ஒரு பிரபுவும் ஒரு பட்டதாரியும் (பணங்கொடுத்தவர்களில்) முன்வர முடியாது. இன்னும்பல தொல்லைகள் பட்டம் பதவிகளால் நம் கட்சிக்கு உண்டு, அதை சமயம் வரும்போது கவனிக்கலாம்.

ஆகவேதான் பட்டம் பதவி, நம் கட்சிக்கு அத்தனை அவசியம் என்று பெரும்பான்மையோர் கருதவில்லையே ஒழிய வேறு இல்லை. மற்றெந்த வழியில் ஜஸ்டிஸ்கட்சி கெட்டுவிட்டதென்றோ சேலம் மாநாடு சரியற்றதாகி விட்டதென்றோ இதுவரை யார் சொன்னார்கள்?

ஆகவே இந்த நிலையில் பட்டம் பதவி ஆளர்களும், நாமினேஷன்காரர்களும், கட்சியின் பேரால் தன்னலம் பேணி ஏமாற்றமடைந்த போதெல்லாம் கட்சிக்குத் தொந்திரவு கொடுத்துவந்தவர்களும், தனக்கு லாபமில்லாவிட்டால் தனக்கு எந்தவிதக் கட்சியுமில்லாமல் தன்னாசாயிருந்தவர்களும், பணம் கொடுத்தால் வாழ்ந்தது, பணம் நிறுத்தினால் தாழ்ந்தது என்கின்ற கூலிகளும் சேர்ந்து கொண்டு ஒரு கட்சி ஆரம்பிக்க முயற்சித்துக் கொண்டு, அதற்குப் பெயர் ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லிக்கொண்டு, அதற்கு ஆக ஒரு மாநாடு என்று எதிரி பத்திரிகைகளை தஞ்சமடைந்து விளம்பரம் செய்துகொண்டு மாநாடு நடத்தவும் முற்படுவார்களானால் இதைப் பற்றி நாம் பொது ஜனங்களையே சிந்தித்துப் பார்க்கும்படி சொல்வதல்லாமல் இப்போது வேறு என்னசெய்ய முடியும்.

உண்மையில் ஒரு கட்சியானது நாளடைவில் தீவிரமான கொள்கைக்கும் நடைமுறைக்கும் போய்விடுமானால் கட்சியில் இருந்துகொண்டோ, கட்சியைப் பயன்படுத்திக்கொண்டோ இருப்பவர் அத்தீவிரக் கொள்கையின் படிபட முடியாதவர்களாக இருப்பார்களானால் அவர்களுக்குக் கௌரவமான வழி இல்லாமற் போய்விடவில்லை.

என்னவெனில், துணிந்து கட்சியை விட்டு வெளியேறி தங்களுக்குப் 'புதுக் கொள்கை'களில் தீவிர திட்டங்களில் நம்பிக்கை இல்லை என்பதாக வெளிப்படுத்தியும் அவசியமானால் அத்தீவிர திட்டங்கள் நாட்டு நலத்திற்கு நலம் பயக்காதென்றும், அல்லது கேடு பயக்கும் என்றும் சொல்லி, ஆதலால் இன்ன இன்ன கொள்கையோடும், திட்டங்களோடும் நாங்கள் புதுக் கட்சியை ஆரம்பிக்கப்போகிறோம், இதில் யாவரும் சேரவாருங்கள் என்று சொல்லிக் கொண்டு கட்சி ஆரம்பித்து வேலை செய்வதாகும். அப்படிக்கு இன்றியும் அக்கட்சி கெட்டுப்போய்விட்டது ஆதலால் அதை யாரும் ஆதரிக்காதீர்கள் என்றாவது சொல்லி அநாமதேயம் கோழைத்தனமாய் நாணயமற்றதனமாய்க் கொஞ்சமும் சுயமரியாதையைப் பற்றிக் கவலையில்லாமல், "தீவிரக் கொள்கை கொண்டதால் அக்கட்சி நடவடிக்கை செல்லுபடி அற்றதாகி விட்டது. நாங்கள்தான் அந்தக் கட்சிக்காரர்களாக இருக்கிறோம். இதற்குப்பெயர்தான் ஜஸ்டிஸ்கட்சி. அதற்கு இன்னார் ஆக்டிங் தலைவர், இன்னாரை நிரந்தர தலைவராகச் செய்து இருக்கிறோம். தலைவரை ஏற்படுத்திக்கொண்டு கூட்டம் நடத்தி கட்சியை காயமாக்கப் போகிறோம். இதற்கு சம்மதித்தவர்கள் மட்டும் வாருங்கள், அடையாளம் பார்த்து ஆளை உள்ளேவிட வாயிற்படியில் போலீசார் இருப்பார்கள்"

என்று ஏற்பாடும் விளம்பரமும் செய்துகொண்டு மற்றொரு கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு கூட்டம் கூடுவது மனிதத்தன்மைக்கு ஏற்றதா என்று கேட்கிறோம்.

இந்தப்படி நடப்பதானால் இப்படி நடப்பவர்களுக்கும் தோழர் பாலசுப்பிரமணியம் கோஷ்டிக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிறோம். இதன் பலாபலனை தோழர் பாலசுப்பிரமணியம் கோஷ்டி தாங்கும் அளவு இந்தப் பட்டதாரிகளும், பட்டவிரும்பிகளும் தாங்கமுடியுமா என்று கேட்கிறோம்.

உண்மையாகவே இந்தப் பட்டதாரிகளின் பொது வாழ்வு அஸ்தமிக்கப் போகிறது என்பதை மனவேதனையுடனேயே எச்சரிக்கிறோம். இவர்கள் தங்கள் கட்சிக்கு வேறு பெயர் வைத்துக்கொள்வதில் யாருக்கும் ஆட்சேபணை இருக்காது. அதனால் கேடும் தவறுதலும் ஏற்பட்டு விடாது, இது இயற்கையுமாகும்.

அப்படிக்கில்லாமல் ஒரு நாட்டில் ஒரு சமுதாயத்தின் பேரால் ஒரு அடிப்படையான கொள்கையை சொல்லிக் கொண்டு ஒரே பேருடன் இரண்டு கட்சி இருந்து வேலை செய்வதென்றால் இது காலித்தனத்தையும், கலவரத்தையும், குழப்பத்தையும், இழிவையும் உண்டாக்குவதற்கு விதைக்கும் விதை அல்லவா என்று கேட்கின்றோம்.

பெரிய ஆளுகள் என்பவர்களும், பெருங்காரியங்களை எதிர்பார்ப்பவர்களும், ஒரு அளவுக்காவது ஒரு இன மக்களிடமாவது மதிப்பும் அன்பும் இருக்க வேண்டியவர்களுமான சிலர் இப்படி தோழர் பாலசுப்பிரமணியத்தைநம்பி அவர் பத்திரிகையை நம்பி இறங்கி இருப்பதைப் பார்த்தால் அவர் தயவிருந்தால் பப்ளிக் பிராசிக்யூட்டராகலாம், திவான்களாகலாம், சர்க்காரில் காரியம் சாதித்துக்கொள்ளலாம் என்று கருதிக்கொண்டு சென்னையில் வந்து தெருவில் திரிந்துகொண்டிருக்கும் மக்களுடைய கூட்டத்திற்கும் அவரை நம்பினால் தலைவர்களாகிவிடலாம், கட்சி நடத்திவிடலாம் என்று கருதுகிற இவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்பது விளங்கவில்லை. திராவிட மக்களும், திராவிட வாலிபர்களும் முன்போன்ற மௌடீகர்கள் அல்ல, விழிப்படைந்தவர்கள்: ஆதலால் நடப்பது நடக்கட்டும்.

## பாராட்டுகிறோம்

### பார்ப்பனரல்லாத வக்கீல் சங்கம்

17-4-46-ந் தேதி சென்னையில் கூடிய பார்ப்பனரல்லாத வக்கீல் சங்க நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில்,

சட்டக்கல்லூரியிலும் (லாகாலேஜிலும்) நீதி இலாகாவிலும் (ஜுடிஷல் சர்வீஸிலும்) 100-க்கு 97 பாகம் பார்ப்பனரல்லாதாருக்கு ஒதுக்கி வைக்கவேண்டும் என்றும், அட்வகேட் ஜெனரல்களாக பார்ப்பனரல்லாதார்களை நியமனம் செய்யவேண்டும் என்றும் பார்ப்பனர்களுக்கே அட்வகேட் ஜெனரல் பதவியை ஏகபோகமாய் இருந்து வருவது கண்டிக்கத்தக்கதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதை நாம் பாராட்டுகிறோம்.

பார்ப்பனரல்லாத வக்கீல்கள் தங்கள் ஸ்தாபனத்திற்கு திராவிடர்கள் வக்கீல் சங்கம் என்று ஒரு பொருத்தமான பெயர் வைத்துக்கொள்ள வெட்கப்பட்டாலுங்கூட இப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றத் துணிந்ததற்கு ஒவ்வொரு திராவிடரும் பாராட்டியே தீருவார்கள்.

இத்தீர்மானத்தில் அதிசயமோ புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட விஷயமோ ஒன்றும் இல்லை என்றாலும் இதுவரை சிறிதுகூட இன உணர்ச்சியோ, வகுப்பு உணர்ச்சியோ இல்லாமல் அடை நடுங்கிகளாய் கோழைகளாய் சுயநலமே லட்சியமாய், அதற்கே போட்டி போட்டுக் கொண்டு தங்கள் இனத்தை விற்றுவந்தவர்களாய் பெரும்பான்மையாய் இருந்த பார்ப்பனரல்லாத வக்கீல்கள் ஒன்று சேர்ந்தோ சேராமலோ, ஒரு சங்கத்தைத் தோற்றுவித்துக் கொண்டது முதலாவதாகப் பாராட்டத்தக்கதாகும். அதிலும் இப்படிப்பட்ட தீர்மானங்கள் செய்ய முன் வந்தது மேலும் பாராட்டத்தக்கதாகும்.

இவர்கள் இவ்வளவோடு நிற்காமல் நீதியிலும், நிர்வாகத்திலும், நடப்பிலும், குற்றங்களும், குறைகளும், அலட்சியங்களும் கண்ட இடத்தில் ஜட்ஜிகளையும், அரசாங்கத்தையும், கவர்னரையும் கண்டிக்கும் துணிவும் பார்ப்பனரல்லாத வக்கீல்களுக்கு ஏற்படவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

வகுப்புவாரி முறைப்படி முன்சிப்புகள் தெரிந்தெடுப்பதால் இனி 10 வருஷ காலத்திற்குள் பார்ப்பனரல்லாதவர்கள் சப்ஜட்ஜி, ஜில்லா ஜட்ஜி ஆகிய பதவிகளில் தாராளமாய் இருக்கக் காணலாம் என்றாலும், ஹைகோர்ட்டு பார்ப்பன ஆதிக்கமாகவும் அவர்களுக்கு ஆள்பட்ட 'வெள்ளைக்காரர் மயமாகவும் இருக்குமானால் எந்த சப்ஜட்ஜியும், ஜில்லா ஜட்ஜியும் சுதந்திரமாக இருக்க முடியாமலே போவதோடு பார்ப்பன அடிமையாகவேதான் இருக்க நேரிடும். ஆகையால் பார்ப்பனரல்லாத வக்கீல் சங்கம் ஹைகோர்ட் ஜட்ஜிகளையும்; கவர்ன்மெண்டையும் கண்டிக்கத் துணிவுகொண்டு தாராளமாய் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டி வரவேண்டும்.

சமீப காலத்தில் காலியான அட்வகேட் ஜெனரல் பதவியை சர்க்கார் ஜாலவித்தை செய்து அதை ஒரு பார்ப்பனருக்கே மறுபடியும் சேரும்படி செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கதும் விசனிக்கத்தக்கதுமாகும். மேன்மை தங்கிய ஹோப் துரை கவர்னர் காலத்தில் இப்படி நடந்தது மிகவும் ஏமாற்றமடைந்த காரியமாகும். ஹைகோர்ட் ஜட்ஜு பதவியைவிட அட்வகேட் ஜனரல் பதவியானது அரசியல் சமுதாய இயல் ஆகியவற்றில் மிகவும் முக்கியமான ஸ்தானமாகும். அப்படிப்பட்ட பதவி திராவிடரின் பிறவி எதிரிகளாகிய ஆரியர்களுக்கே ஏகபோக உரிமையாக ஆக்கப்படுவதானால் அரசாங்கத்தை ஆரிய அரசாங்கம் என்று சொல்லுவதைத்தவிர வேறுகாரணம் என்ன சொல்லமுடியும்.

தோழர் ராஜமன்னார் அவர்கள் இனியும் ஒரு ஐந்துவருஷகாலம் பொறுத்து ஹைகோர்ட் ஜட்ஜாக ஆக்கப்படுவதில் என்ன குடி முழுகிப்போகும்படியான நஷ்டம் நம் சர்க்காருக்கோ ஹைக்கோர்ட் பெஞ்சுக்கோ ஏற்பட்டுவிடக் கூடும்? அல்லது ஹைகோர்ட் ஜட்ஜு பதவிக்கு பார்ப்பனரல்லாதாரில் தகுதியுள்ள வக்கீல்கள் இல்லை என்று அதிலும் இப்போது ஹைகோர்ட் ஜட்ஜுகளாக இருக்கும் பார்ப்பனர்களின், முஸ்லிம்களின் யோக்கியதைக்குச் சரியான ஆள்கள் இல்லை என்று நமது கவர்னர் நெஞ்சில் கை வைத்து சொல்லமுடியுமா என்று கேட்கிறோம். இந்தக் காரியங்களைப் பார்க்கிறபோது நமது கவர்னர் அவர்கள் வாயில் சிரித்துப் பேசுவதும், கையில் மற்றவர்கள் காட்டின பக்கம் கையெழுத்துப் போடுவதும் என்பதல்லாமல் துணிவையும் நியாயத்தையும் அதிகம் மதிப்பதில்லை என்று தான் சொல்லவேண்டும். இந்த நாட்டில் 100-க்கு 97 பேர்களாக இருக்கும் இந்நாட்டு மக்களில் ஹைகோர்ட் ஜட்ஜு பதவிக்கு ஒரு ஆள்கூட இல்லை என்ற அவமானகரமான காரியத்தை அனுபவித்துக்கொண்டும், இதற்கு ஆயுதமாக இருக்கும் கவர்னரை இனியும் 5 வருஷத்திற்கு இருக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்த கேவல நடத்தையை இந்த மக்களின் மானமற்ற தன்மையையும், தகுதியற்ற தன்மையையும் உறுதிப்படுத்த உலகம் பயன் படுத்திக்கொள்ளாமல் இருக்காதென்றே கருதுகிறோம்.

நீதி இலாகாவும் நிர்வாக இலாகாவும் மிகமிக சாதாரணத்தன்மையை இந்த கவர்னர் அவர்கள் காலத்தில் அடைந்துவிட்டது. இதற்கு யுத்த அவசியமும் அவசரவேலையும் காரணம் என்று சொல்லலாம். ஆனால் அது பார்ப்பனர் விஷயத்தில் அப்படி இல்லாமல் அவர்களுக்கு முன்னவையைவிட அனுகூலமாகவே அந்த இரண்டு இலாகாக்களும் இருந்துவருகின்றன.

காங்கரஸ் மந்திரிகள் காலத்தில் 'நாசெவன் கமிட்' செய்தவர்கள் முதற்கொண்டு கேடிகள் உள்பட கொலைகளில் நேரில் சம்மந்தப்பட்டவர்கள் வரையில் நிர்வாகத் தோரணையில் விடுவிக்கப்பட்டதை யார்தான் மறுப்பார்கள்? நீதியைச் சொல்லவே வேண்டாம். ஆனால் இன்று எப்படி இருக்கிறது? சல்லடை போட்டு சலித்தெடுப்பது போல் பார்ப்பனர்கள் ஒவ்வொன்றிலும் அனுகூலமடைகிறார்கள், மற்றவர்கள் கஷ்டத்திற்காளாகிறார்கள்.

மற்றும் சாதாரண பாமர மக்கள் விஷயத்தில் பார்ப்போமானால் அதுபோலவே பெரும்பாலும் செல்வவான்களே பயன் அடைகிறார்கள். பாமர மக்களை, அவர்கள் படும் துன்பங்களை லட்சியம் செய்வது அரிதாகவே இருக்கிறது.

இன்றுள்ள நிலையில் மாகாணம் முழுவதும் உள்ள அல்லது தமிழ் நாடு முழுவதிலுமாவதுள்ள பார்ப்பனரல்லாத வக்கீல்கள் ஒன்று சேர்ந்து, தங்கள் ஸ்தாபனத்தை

வருத்தப்படச்செய்து, செல்வவான்களையும் அதிகாரிகளையும் லட்சியம் செய்யாமல் துணிகரமாய் காரியம் செய்ய முன்வருவார்களானால் உண்மையில் எல்லாத் துறைகளிலும் பெரியமாறுதல்களை காணலாம். அப்படிப்பட்ட காரியங்களை பாமரமக்களும் வாலிபர்களும் ஆதரித்தே தீருவார்கள்.

இன்று பார்ப்பன சமுதாயம் யுத்தத்தில் சர்க்காருக்குத் துரோகம் செய்யும் ஹைகோர்ட்டையும், செக்ரட்டேரியேட்டையும், கவர்னர் ஆட்சியையும், ஆலோசகர்களையும் தங்கள் கைக்குள் ஆக்கிவைத்திருப்பதற்குக் காரணம் பார்ப்பன வக்கீல் கும்பலே ஒழிய வேதமோ, சாஸ்திரமோ, சனாதனாச்சாரிகளோ அல்லவென்பது அறிஞர்க்குப் புலனாகாமல் போகாது.

ஆதலால், தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஜில்லாவிலும் பார்ப்பனரல்லாத (திராவிடர்) வக்கீல் கழகம் ஏற்படுத்தி பொதுக் காரியங்களைத் தங்கள் லட்சியமாக வைத்துக் கட்டுப்பாடாய் தொண்டாற்ற வேண்டுமாய் ஆசைப்படுகிறோம்.

மற்றும் இம்மாகாணத்தில் உள்ள பார்ப்பனரல்லாத (திராவிட) வக்கீல்கள், திராவிடர்களின் அரசியல் சமுதாய இயக்கஸ்தாபனமாகிய திராவிட கழகமாகிய ஜஸ்டிஸ் கட்சியில் புகுந்து தீவிர தொண்டாற்ற தைரியமில்லாமல் போனாலும், ஜஸ்டிஸ் கட்சியால் முன்னுக்கு வந்து ஜஸ்டிஸ் கட்சியால் பலனடைந்து ஜஸ்டிஸ் கட்சியால் பெரிய மனிதர்களாகி இன்று ஜஸ்டிஸ் கட்சிக்கே மனதாரக்கேடு செய்ய முன்வந்து கட்சியின் கொள்கைகள் திட்டங்கள் எல்லாவற்றையும் கொலைசெய்து, கட்சியை அழிக்கத் துணிந்து சுயலாபந்தேட முன்வந்திருக்கும் கூட்டத்துடன் சேராமலாவது இருந்து, இனமானத்தையும் நாணயத்தையும் காப்பாற்றவேண்டுமாய் ஆசைப்படுகிறோம்.

இது திராவிடமக்களுக்கு ஒரு சோதனைக்காலமாகும்.

## திருப்பூரில் ஆண்டுவிழா

திருப்பூர் திராவிடர் கழக நூல் நிலைய இலவசப் படிப்பக ஆண்டு நிறைவு விழா மே. 5, 6 தேதிகளில் திருப்பூரில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## “நஷ்டமாவது” என்ன?

(தூ. உ. க.)

கடும் பகல் உக்கிரமான வெயில். பெரியார் ஈ. வெ. ரா. தன் காரியாலயத்திலிருந்து வீட்டுக்குச் சற்று நடையாகப் போனார். கூட நானும் தொடர்ந்தேன். வெயிலின் கடுமையால் கூரை ஒன்றின் நிழலில் நின்றார். அருகில் நின்ற நான், “வெயில் கடுமையாகத்தானிருக்கிறது”! என்றேன். உடனே பெரியார் “ஆஸ்திக பிரசங்கிகளின் வாதப்படி ‘வெயில்’ ஆண்டவன், ‘சிருஷ்டி” நம் நாட்டில் வெயிலால் உயிரைவிடுகிறார்கள், மேல் நாட்டில் குளிர் கொடுமை மக்களைச் சகிக்கமுடியாததாயிருக்கிறது. இரண்டிடங்களிலும் அளவுக்கு மீறிய ‘உஷ்ணம் குளிர்’’ மனிதனுக்கு கஷ்டம்தான் உண்டாகிறது. தன் பகுத்தறிவால் இவைகளுக்குப் பரிகாரம் தேடவேண்டியிருக்கிறது. ஏன்? இந்த இரண்டையும் படைத்த ஆண்டவன், மேல்நாட்டில் இருக்கும் அளவுக்கு மீறிய குளிரில் (பனியில்) பாதியை நம்நாட்டிலும், மிதமீறிய நம் நாட்டு வெயிலை அந்த நாட்டில் பாதியையும் சிருஷ்டித்தால் ‘ஆண்டவனுக்கு நஷ்டமாவது என்ன? என்று வேடிக்கையாகச் சொன்னார். இது சில வருஷங்களுக்கு முன்பு. சிருஷ்டியில் எதற்கும் “வியாக்யானம் உள் கருத்து” கற்பிக்கும் சிலரது கற்பனா சக்திக்கு பதில்சொல்ல வேண்டியதில்லை. பிரத்தியட்சமாய் அனுபவிக்கும் கஷ்டத்தைப் பார்க்கும்போது, “ஆண்டவனின்” தவறுதல்கள் மனித வாழ்க்கையில் உண்டு என்றுதானே முடிக்கவேண்டும்! ‘[illegible]’’ ஆறறிவிற்கும் மிக்கும் மனிதனுக்கு அர்த்தமாகுமா? என்று சொல்லி சமாதானம் செய்துகொள்வதா? அப்படியானால் ‘ஆண்டவ’னின் தவறுதல்களுக்கு, நம் அறிவினாலே வைத்தியம் செய்து கொள்வது மனித வாழ்க்கையின் கஷ்டத்திற்கு “பரிகாரம்” என்று பெரியார் சொல்வதை கேட்பதைத்தவிர, வேறு வழி என்ன?

## பெயர் சூட்டு விழா

திருவண்ணாமலை நகர் தனி உணவு விடுதிக்காரர் தோழர் பழமலைப் பிள்ளையின் மகனுக்கு புலவர் கா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் இளஞ்சேரன் எனப் பெயர் சூட்டல் நடைபெற்றது. அதுசமயம் புலவர் முருகேசனாரும் பிற தோழர்களும் திராவிடப் பண்பு பற்றிப் பேசினார்கள். இதன் நினைவாக ‘குடி அரசு’க்கு ரூ. 1 நன்கொடை வழங்கப்பட்டது.

## ஆண்டு விழா

ஸ்ரீரங்கம் தெற்குவாசல் திராவிடர் கழக ஆண்டு விழாவும், திராவிட மாணவர் கழகத் திறப்பு விழாவும் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் 22-4-45-ந் தேதி மாலை 6 மணிக்கு ஸ்ரீரங்கம் தெற்குவாசல், சந்திர வீதியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. வீதி முற்றும் முன்னும் பின்னும் மக்கள் உட்கார்ந்திருந்தார்கள். வீடுகளின் மாடியிலும் உட்கார்ந்துகொண்டு பலர் கேட்டுக்கொண்டிருந்தனர். ஒலி பெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.

தலைவர் தலைமையுரைக்குப் பின் பிறவேலையின் காரணமாகச் செல்ல வேண்டியிருந்ததால் பின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமைதாங்கினார்.

தோழர்கள் எழில் இலவன் மீன்புயல், பி. கே. ஐயா, டி. என். ராமதுரை, டி. கே. சீனிவாசன், சிவபாக்கியம் அம்மையார், து. மா. பெரியசாமி, எஸ். தயமணி இராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் நீண்ட முடிவுரைக்குப்பின் டி. பி. ரெங்கராஜன் நன்றி கூற கூட்டம் இரவு 10 மணிக்கு மேல் “பெரியார் வாழ்க” “திராவிடநாடு திராவிடருக்கே” என்ற வாழ்த்தொலி முழக்கத்துடன் முடிவுற்றது.

## கோவை ஜில்லா முதலாவது மருத்துவர் மாநாடு

ஷை மாநாடு கோவை சிட்டி முனிசிபல் ஹைஸ்கூலில் மே 11-ந் தேதி பழையகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் மாநாட்டைத் திறந்துவைப்பார். மற்றும் பலர் கலந்து கொள்வார்கள்.

## கல்வார்பட்டியில் சந்தை

இவ்வூரில் புதிதாகக் கூட்டப்படும் சந்தையை 3-5-45-ந் தேதி வியாழன் மாலை 4-30 மணிக்கு மதுரை ஜில்லா தலைவர் டபிள்யு. பி. ஏ. சௌந்தர பாண்டியன் அவர்கள் துவக்கிவைப்பார்.

## நன்கொடை வரவு

ஆனைமலை திராவிடர் கழகத் தலைவர் தோழர் எம். [illegible] பி. ஏ. அவர்கள் ‘குடி அரசு’ வளர்ச்சிக்கு ரூ. 100 நன்கொடையளித்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# திராவிடக்கழகங்கள்

செங்கற்பட்டு ஜில்லா உத்தரமேரூரில் 8-4-45-ந் தேதி திராவிடக் கழகம் திறக்கப்பட்டது. அதன் திறப்பு விழா 21-4-45-ந் தேதி பெரியார், தளபதி சி. என். ஏ., முதலியவர்களைக்கொண்டு நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* *

சீரங்கம் திராவிடர் கழகத்தின் சார்பில் சர் செல்வம் நினைவு நாள் சீரங்கம் தெப்பக்குளத் தெருவில் 28-3-45-ந் தேதி து. வி. ராகவன் (மாணவர், அர்ச் ஜோசப்பர் கல்லூரி) தலைமையிலும் சீரங்கம் வடக்குவாசலில் 31-3-45-ந் தேதி தோழர் து. வி. ராகவன் தலைமையிலும் கொண்டாடப்பட்டது. பல மாணவத் தோழர்கள் பேசினார்கள்.

3-4-45-ந்தேதி திருவானைக்காவலில் தோழர் து. வி. ராகவன் தலைமையில் ஷை நாள் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் பேசினார்கள்.

* *

சேலம், அரிசிப்பாளையம் திராவிடர் கழக நிர்வாகக்கூட்டம் 31-3-45ந்தேதி ஷை கழகத்தலைவர் தோழர் வி. சித்தையன் தலைமையில் கூடியது. 31-3-45வரையுள்ள கழகத்தின் வரவு செலவுக் கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு மீத முள்ள ரூ. 12-1-0ம் பொக்கிஷதாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. உள்ளூர் கைத்தறி நெசவாளர் சங்கத்தில் காலியாகயிருக்கும் மெம்பர் பதவிக்கு ஷை கழகத் தலைவர் தோழர் வி. சித்தையன் அவர்களை அபேட்சகராக நிறுத்துவதென்றும், கோடை விடுமுறையில் சுற்றுப்பிரயாணம் செய்யும் மாணவத் தோழர்களைக் கொண்டு கூட்டங்கள் போடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

* *

அந்தணர்பேட்டை திராவிடர் கழகத்தின் சார்பில் செல்வம் நினைவுநாள் பொதுக்கூட்டம் 11-4-45ந் தேதி தோழர் பொன்னுசாமி அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

திருவாரூர் நாடார் விடுதியில் 12-4-45-ந் தேதி தோழர் சிவசங்கரன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதுகாலை வரவு செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு தற்சமயம் இருந்து வந்த நிர்வாகக் கமிட்டி கலைக்கப்பட்டு 29-4-45-ந் தேதி புதுத் தேர்தல் நடத்திக்கொடுக்க தோழர் ச. ராமநாதன் அவர்களைத் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்ட தீர்மானம் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

29-4-45-ந் தேதி மாலை 6 மணிக்கு திருவாரூர் நாடார் விடுதியில் திராவிட கழக நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடை-

# திராவிட நாட்டுச் செய்திகள்

கரூர் மருத்துவர் சங்கத்திற்கு இரண்டாவது ஆண்டுக்கு தேர்தல் 12-4-45-ந் தேதி நடைபெற்றது. தோழர் வி. அண்ணாமலை தலைவராகவும் மற்ற நிர்வாகஸ்தர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பொக்கிஷதார் தோழர் கா. சிரங்கன் வசம் ரூ. 278-3-0 கொடுக்கப்பட்டது.

* *

இராசிபுரம் பைந்தமிழ் இலக்கிய மன்றத் திறப்பு விழா 15-4-45-ஆந் தேதி சேலம் நகராண்மைக் கழகக் கல்லூரித் தலைவர் தோழர் அ. இராமசாமிக்கவுண்டர் எம். ஏ., எல். டி. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. "திருக்குறளும் தமிழ் நிலையும்" என்னும் பொருள் பற்றி பேசினார். தோழர் ரா. தேவநேயப்பாவாணர் 'தமிழ் மறை திருக்குறளே' என்று விரிவுரையாற்றினார். ஆசிரியர் எஸ். மல்லிகார்ச்சுனன் நன்றி கூறினார்.

* *

கொழும்பு பம்பளப்பிட்டி காலிரோட் 59 நெ. இல்லத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தின் கள்ளிப்பட்டு பகுத்தறிவு சங்கக் கூட்டம் 7-4-45ந் தேதி தோழர் பி. பி. பழனிதாஸ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. எம். துரைசாமி, பி. பெரியசாமி பீ. எஸ். ஆறுமுக முதலியவர்கள் பேசியபிறகு தோழர்கள் கே. வி. ரெங்கசாமி தலைவராகவும், மு. பெருமாள் பொருளாளராகவும், பி. பெரியசாமி, ஏ. மாதவன் கூட்டுக்காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

13-4-45ந் தேதி வெள்ளிக்கிழமை கடம்பூரில் தொழிலாளர் ஐக்கிய சங்கம் திறக்கப்பட்டு தோழர் கே. எஸ். காளியப்ப நாடார் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாகக் கழகம் தெரிந்தெடுக்கப்பட்டது. தோழர் எஸ். ஆர். ராமலிங்க நாடார் தொழிலாளர் நிலையும் அவர்கள் கடமையும் என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

* *

சேலம் ஜில்லா பார்க்கவகுல முதலாவது நிர்வாகக் கூட்டம் 15-4-45-ந்

---

பெறுமென தேர்தல் அதிகாரி தோழர் ச. ராமநாதன் அறிவிக்கிறார்.

* *

10-4-45-ல் மாப்பிள்ளையூரணி திராவிட கழகத்தின் சார்பாக ஷையூரில் தோழர் எஸ். எஸ். காசி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் பாவலர் பாலசுந்தரம் திராவிடர் கழகத்தில் அங்கத்தினராகச் சேரவேண்டிய அவசியம் என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

தேதி தோழர் என். பழனிமுத்து உடையார் தலைமையில் நடைபெற்றது. சேலம் ஜில்லா பார்க்கவகுல முதலாவது மாநாட்டை அதே இடத்தில் வைகாசி மாதக் கடைசி வாரத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

* *

கும்பகோணத்தில் சௌராஷ்டிரயுவர் சங்கம் ஒன்று திறக்கப்பட்டது. ஷை சங்கத்திற்கு தோழர் எம். வி. வெங்கட்டராம் பி. ஏ., அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் கழகம் ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது. ஷை கழகத்தின் ஆதரவில் 9-4-45-ந் தேதி தோழர் பி. சி. வெங்கிடாசலபதி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் அண்ணாமலைப்பல்கலைக் கழக விரிவுரையாளர் தோழர் எம். என். ரெங்காச்சாரி எம். ஏ., பி. எல்., அவர்கள் பேசுகையில் சௌராஷ்டிரர்கள் ஆரியர்கள் அல்லவென்றும், பிராமணர்கள் என்றபெயரை வைத்துக்கொள்ளக்கூடாதென்றும், சௌராஷ்டிரர்கள் திராவிடர்களுடன் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்றும் திராவிடநாடு பெற பாடுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். காலைக் ரேடியோ ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.

* *

சமயநல்லூர் கிராம தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் சார்பில் 14-4-45ல் தோழர் எம். செல்லப்பா தலைமையில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 53வது பிறந்தநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர் எஸ். வி. பெருமாள், எஸ். எம். ராமதாஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நாசரேத்தில் திராவிடர் கழகத்தின் சார்பாக 18-4-45-ந் தேதி ஒரு வாசகசாலை ரெயில்வே ஸ்டேஷன் அருகில் திறக்கப்பட்டது. தோழர். எம். எம். அண்ணாமலை நாடார் தலைவராகக் கொண்ட நிர்வாகக் கழகம் தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

8-4-45-ஆந் தேதி தாராவில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் என். கே. அழகர் தலைமையில் தெ. இ. ஆ. தி. வாலிபர் கழகம், தி. தா. நூல் நிலையம், கா. தா. ஆ. தி. மகாஜன சங்கம், தி. கா. பகுத்தறிவு நிலையம் ஆகிய இயக்கங்களின் சார்பில் நடைபெற்றது. சென்பிரான்சிஸ்கோ மாநாட்டிற்குத் தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதி ஒருவரை அனுப்பாதது பற்றி வருந்துவதாகவும், சர் ராமசாமி முதலியார் தெரிந்தெடுக்கப்பட்டமைக்கு அன்னாரை வாழ்த்தியும், வக்கீல் தோழர் எம். தேவதாசன் பி. ஏ., பி. எல்., அவர்களைப் பப்ளிக் பிராசிக்யூடாராக நியமிக்குமாறு

சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொள்வ தாகவும் தீர்மானிக்கப்பட்டது.

*

15-4-45 மாலை, தாராவி, எல். எம். சால் சமவெளியில் தெ. இ. ஆ. தி. வா. கழகம், தி. ந. பகுத்தறிவு நிலையம், ஆகிய இயக்கங்களின் சார்பில், தோழர் டி. ஜே. தேவருக்கர் (பம்பாய் நகராண்மை உறுப்பினர்) தலைமையில் தாழ்த்தப்பட்டாரின் தனிப்பெருந்தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 53வது பிறந்தின விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் டாக்டர் அம்பேத்காரின் சேவையைப் புகழ்ந்துபேசினர்.

*

ரெ. புதுக்கோட்டை தாழ்த்தப்பட்டோர் வாலிபர் முன்னேற்றக் கழகத்தின் ஆரம்ப விழா 20-4-45-ல் தோழர் எம். பி. கல்லுசாமி அவர்கள் தலைமையில் தோழர் கே. நடேசன் ஆசிரியரால் துவக்கிவைக்கப்பட்டது. தோழர்கள் எம். முப்புலி, என். சண்முகம், எம். பி. குமாரசாமி முதலியவர்கள் பேசினார்கள். தோழர் கே. ஆர். கந்தசாமியால் வந்தனோபசாரம் கூறப்பட்டது.

*

தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் தோழர் அன்பு அவர்கள் தலைமையில் 14-4-45-ந் தேதி மாலை அம்பேத்கார் பந்தலில் நடந்த பொதுக் கூட்டத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 53-வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் சி. கெ. சுப்பையா வந்தனம் கூறினார்.

*

சென்னை திராவிட கழக உறுப்பினரும் சுயமரியாதைப்பற்றுடையவருமான தோழர் ச. திருநீலகண்டம் பவனி அவர்களுக்கு சில மாதங்களுக்குமுன் பிறந்த ஆண் குழந்தைக்கு 14-4-45ல் பிரபாகரன் என பெயரிடப்பட்டது.

*

13-4-45-ந் தேதி மாலை 6-30-மணிக்கு அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 53-வது ஆண்டு பிறந்த தின விழா கோவை தோழர் சி. டி. சுப்பையா அவர்களின் தலைமையில் டை சங்க மைதானத்தில் நடைபெற்றது.

*

குனியமுத்தூர் திராவிட கழக சார்பில் 22-4-45-ந் தேதி டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. தோழர் கே. ராமு தலைமை வகித்தார். தோழர்கள் பி. வி. குப்புசாமி, சி. ராமசாமி, எ. ராமமூர்த்தி ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

*

தஞ்சை ஜில்லா புரசங்காடு ஷெட்யூல்ட் கழக சார்பாக 20-4-45-ந் தேதி தஞ்சை, [illegible]சி மாவட்ட தேசீய

## மறைவு

அம்மாப்பேட்டை பகுத்தறிவுப் புலவர் நா. சிங்காரவேலர் ஒன்றரை ஆண்டுக்குமுன் சீர்திருத்தத் திருமணம் புரிந்துகொண்ட தனது வாழ்க்கைத் துணைவியார் மாசிலாமணியை 12-4-45-ந் தேதி பிரிந்தமைக்குத் தங்களது ஆழ்ந்த வருத்தத்தை அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம் எனத் திண்ணைப் புலவர்கள் நா. மு. மாணிக்கமும் த. முருகேசனாரும் தெரிவிக்கின்றனர்.

0 0

வேலூர் (சேலம்) கந்தசாமிக் கவுண்டர் உயர்நிலைப்பள்ளித் தலைமை தமிழாசிரியர் வை. பொன்னம்பலனார் தமையனாரும் கீழ மாளிகை வாராள்வேலர் வை. கந்தசாமிப் படையாட்சியார் தம்பியாருமான பெருநிலக்கிழவரும் தன்மான இயக்கத்தினரும் ஆகிய வை. விசுவநாத படையாட்சியார் திடீரென்று வெப்பு நோய் (அம்மை) கண்டு தமது 45-வது வயதில் உரிமையூர் கீழமாளிகையில் 16-4-45-ந் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார் என்பதையறிய வருந்துகிறோம். இவருக்கு ஒரு மனைவியும், 3 பெண்களும், 4 ஆண்களும் உண்டு. இவரது இறுதிநாட்கடன் 1-5-45-ந் தேதி கீழ மாளிகையில் ஆரியப் பார்ப்பனச் சடங்கின்றி நடைபெறும்.

*

பேராவூரணி திராவிடக் கழகத் தலைவர் தோழர் ஆர். வேணுக்கண்ணு அவர்கள் தாயார் இயற்கையெய்தியதை முன்னிட்டு புரோகிதமற்ற நீத்தார் கடன் செய்யப்பட்டது. இதன் நினைவாக 'குடிஅரசு'க்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது.

*

தூத்துக்குடி உ. பு. அ. சௌந்திரபாண்டியன் தமிழர் சமதர்ம சங்கத்தின் உபதலைவர் தோழர் ஆ. வயணப்பெருமாள் சிலநாள் நோய்வாய்ப்பட்டிருந்து 19-4-45ந் தேதி இயற்கையெய்தியதை முன்னிட்டு டை சங்கத்தார் அன்னவரின் தந்தையாருக்கும் குடும்பத்தாருக்கும் அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்கிறார்கள்.

*

ஈரோடு மருத்துவகுல சங்க பொக்கிஷதார் வீ. கே. பழனியப்ப மருத்துவரின் மனைவி காளியம்மாள் 18-4-45ந் தேதி இயற்கையெய்தமைக்கு ஈரோடு மருத்துவ சங்கத்தார் தங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கின்றனர்.

*

7-4-45 சனி இரவு 11 மணிக்கு திராவிடர் கல்வி வளர்ச்சிக்காரிய கமிட்டி அங்கத்தினரும் சென்னை ஜெகநாதபுரத்து வாசியுமாகிய தோழர் பொ. கண்ணன் அவர்கள் இயற்கையெய்தியதை முன்னிட்டு 15-4-45 ஞாயிறு காலை 10 மணிக்கு அமைந்தகரை திராவிடர் கல்வி வளர்ச்சிக் கழகத்தாரால் ஒரு அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. மீண்டும் 22-4-45 ஞாயிறு தினம் மாலை 6 மணிக்கு உத்தரகிரியையன்று இறந்தோரின் இல்லத்தில் மேற்படி கழகத்தாராலேயே இன்னிசையும், தோழர் ஏழுமலை தலைமையில் அனுதாபக் கூட்டமும் நடந்தது.

*

சென்னை ராவ்சாகிப் தர்மலிங்கம் பிள்ளை அவர்கள் திடீரென கடந்த 22-4-45-உ இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக சென்னை பகுத்தறிவு சங்கம் 22-ந் தேதி மூடப்பட்டது.

---

போர்முலை சொற்பொழிவாளர் தோழர் வி. வீராசாமி பி. எ., அவர்கள் தலைமையில் டாக்டர் அம்பேத்கார் பிறந்த தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதுசமயம் தோழர் என். எஸ். மணி அவர்கள் டாக்டர் அவர்களின் சேவையைப் பற்றி நீண்ட நேரம் பேசினார்.

## அம்பேத்கார் மாணவர் இல்லம்

திருச்சி அம்பேத்கார் மாணவ இல்ல வேலையைக் கவனிக்க தோழர்கள் சிவபிச்சை, வ. வீராசாமி, டி. வி. சன்னாசி, எம். சிங்காரம், அ. தங்கவேலு, கே. வையாபுரி, அ. பொன்னுசாமி, தங்கவேலு, தர்மலிங்கம் முதலிய பிரமுகர்களைக்கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

---

## விற்பனைக்கு

தர்மதீர்த்த சுவாமிகளால் எழுதப்பட்ட பகவத் கீதை ஆராய்ச்சி என்னும் நூல் நம்மிடம் விற்பனைக்குக் கிடைக்கும். கிரௌன் 1/8 சைஸ், 154 பக்கங்கள் கொண்ட, கீதையின் முரண்பாட்டை அணியுற விளக்கிக்காட்டும் சிறந்த நூல் ஒன்றின் விலை அணா 8. தனிப்பிரதி வேண்டுவோர் புக்போஸ்டில் அனுப்ப பிரத்யேகமாக 0-1-3 அணா ஸ்டாம்பும், ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 0-4-3 ஸ்டாம்பும் அனுப்பவும்,

கிடைக்குமிடம்,
'குடி அரசு' பதிப்பகம்,
ஈரோடு.

---

Edited, Printed, and Published by N. Kariyaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.

ரோஜா முத்தையா